எனவே, அவர்கள் 9 ஆம் தேதி வரையிலே இந்த அவையிலே கலந்துகொள்ளக் கூடாது என்று எடுத்த அந்த முடிவை தயவுசெய்து தாங்கள் மாற்றி, இதை ஒரு எச்சரிக்கையாக, இனி அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறக் கூடாது என்கின்ற ஒரு அறிவிப்பாக இதைக் கருதி, தயவுசெய்து ஒரு நாள் என்ற அளவில் இதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இன்று ஒரு நாள் மட்டும் அவர்கள் நீக்கி வைக்கப்படுகிறார்கள். நாளை அவர்கள் அவையில் கலந்துகொள்ளலாம்.

முற்பகல் 10—55

5. தகவல் கோரல்

(அ) சட்டமன்ற நிகழ்ச்சிகள்—அவையில் அனைத்து உறுப்பினர்களது பங்கேற்பினையும் பாரபட்சமின்றி தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

திரு டி. சுதர்சனம்: சட்டமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சட்டமன்றத் தலைவருக்கு உண்டு. இந்த சட்டமன்றத்தில் நடைபெறுகிற பல்வேறு விஷயங்களைத் தொலைக்காட்சி மூலமாக மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். அப்படித் தெரிவிக்கின்றபோது, இங்கே யார் அதிகமாகக் கூச்சல் போடுகிறார்களோ, அவர்களை மட்டும் தொலைக்காட்சியிலே காட்டுவதும், சிறிது நேரம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் காட்டுவதுமாக உள்ளது. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களா, இல்லையா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதே மக்களுக்குத் தெரியாத வகையில் நாங்கள் இருக்கிறோம். அதனாலே எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

வகையில், நாங்களும் சட்டமன்றத்திலே இருக்கிறோம் என்று காட்டுகின்ற வகையிலே இனிமேல் தொலைக்காட்சியில் காட்டுகின்றபோது, எங்களையும் சேர்த்து நாங்களும் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம், பேசுகிறோம் என்பதை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக காண்பிப்பீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9–4–2010 வரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைக்கப் பெற்றதை மறுபரிசீலனை செய்தல்–தீர்மானம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே மாண்புமிகு முதல்வரிடத்திலே அ.தி.மு.க. உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—எப்பொழுதுமே இப்படி ஒரு நடவடிக்கைக்கு உறுப்பினர்கள் உள்ளாக்கப்படுகிறபோது மீண்டும் நம்முடைய கட்சித் தலைவர்களெல்லாம் அந்தக் கோரிக்கையை அவை முன் வைப்பது உண்டு——அதைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு, அந்த நடவடிக்கைகளைத் தளர்த்தி, ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்காக உறுப்பினர்களை அனுமதிக்கச் செய்வதற்கான அந்த நிகழ்வு தொடர்கிறது. நான் 1996 ஆம் ஆண்டு முதலாகவே பார்த்து வருகிறேன். ஆகவே இன்றைக்கும் அந்தப் பெருமனதோடு அண்ணா தி.மு.க. உறுப்பினர்களை இந்த அவைக்கு வரவழைத்ததற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுங்கள். திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசட்டும்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களை சபைக்குள் அனுமதிக்க வேண்டுமென்று யாரும் கேட்காமலேயே, இந்த

மாமன்றத்தில் கோரிக்கை வைக்காமலேயே, இந்த மாமன்றத்தில் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் கோரிக்கை வைக்காமலேயே, மாமன்றத்தில் கேட்காமலேயே, தன்னுடைய கருணை உள்ளத்தால், பெரிய மனதால், அவர்களை வரவழைத்து அவையில் ஜனநாயகக் கடமை ஆற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அனுமதித்த முதலமைச்சர் அவர்களுக்கும், அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. **தகவல் கோரல்**—தொடர்ச்சி

(அ) சட்டமன்ற நிகழ்ச்சிகள்–அவையில் அனைத்து உறுப்பினர்களது பங்கேற்பினையும் பாரபட்சமின்றி தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்—தொடர்ச்சி

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் நடைபெறக்கூடிய அன்றாட நிகழ்வுகளை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய வகையில் இங்கே புகைப்படம் எடுக்கக்கூடியவர்கள் அல்லது தொலைக்காட்சிக்கு செய்தி அனுப்பக்கூடியவர்கள், எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் அல்லது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்களை, ஜனநாயகக் கடமைகளை மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் எடுத்து அனுப்ப வேண்டும். அதை எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும் அனுப்ப வேண்டும். முறையாக அனுப்ப வேண்டும். அல்லது நேரடியாக ஒளிபரப்பினால் அது சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையிலே, தாங்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் கவனம் செலுத்தி, பாரபட்சம் இல்லாமல் எல்லோருடைய பேச்சுக்களையும் எடுத்து அனுப்ப வேண்டும், எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும் அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்பிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் எங்களுடைய உடன்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

[திரு. என். நன்மாறன்] [2010 ஏப்ரல் 8

பாராளுமன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதைப்போல தமிழகத்தின் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் இரண்டு, மூன்று முறை தொலைக்காட்சியில் வந்தீர்களே! நான் பார்த்தேனே! சரி, சொல்லுங்கள். *(சிரிப்பு)*

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தை நடத்தினோம். அப்போது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் மனம் வேதனைப்பட்டு சொன்னதை உங்களிடத்திலே தெரிவித்துவிட்டேன். என்னுடைய கடமை. உங்களிடத்திலே சொல்லிவிட்டேன். எங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். இரண்டு முறை, மூன்று முறை நான் மட்டும் வந்தால் போதாது, சட்டமன்ற உறுப்பினர்களும் தொலைக்காட்சியில் வரவேண்டும் அல்லவா? யாரையும் காட்டுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒளிபரப்பு குறித்து கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் சொன்ன அந்தக் கோரிக்கையின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9–4–2010 வரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைக்கப்பெற்றதை மறுபரிசீலனை செய்தல்—தீர்மானம்—தொடர்ச்சி

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நாளைக்கு வந்து ஜனநாயகக் கடமையாற்றவேண்டும் என்று, யாரும் கேட்காமலேயே—நான் இதற்காக எழுந்து நின்றதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக எழுந்து நின்றேன் என்று தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார். இல்லை. இருந்தாலும், அவர்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு, எதிர்க்கட்சி என்றும் பாராமல், தினம் தினம் திட்டுகிறார்களே என்று பார்க்காமல்,